செ.வெ.எண்: 12 நாள்:08.01.2018

## செய்தி

### முன்னாள் படைவீரர்களின் விவரங்கள் கணிணி மயமாக்கப்படவுள்ளது.

கரூர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் ஆகியோரின் விவரப்பதிவுகள் கணிணிமயமாக்கப்படவுள்ளது. இனி வருங்காலங்களில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்களுக்கு அனைத்து சேவைகள் மற்றும் பயன்பாடுகள் Online மூலம் செய்யப்படவுள்ளது. தங்களது பெயர் மற்றும் விவரங்களை முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் 15 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும். தங்களது விவரங்களை பதிவு செய்யாதவர்களுக்கு சேவைகள் மற்றும் பயன்பாடுகள் பெறுவதில் இடையூறுகள் ஏற்படும். எனவே, முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் தங்களது படைப்பணி விவரங்கள், ஓய்வூதிய ஒப்பளிப்பு ஆணை எண், ஆதார் எண். வங்கி கணக்கு எண், IFSC எண் email Id ஆகிய விவரங்களுடன், தங்களது புகைப்படத்தை JPEG/PNG/JPG வடிவத்தில் 2MB-க்கு மிகாமலும், ஸ்கேன் செய்யப்பட்ட படைவிலகல் சான்று PDF வடிவத்தில் 4MB-க்கு மிகாமலும், ஓய்வூதிய பங்களிப்பு ஆணையை PDF வடிவத்தில் 4MB-க்கு மிகாமலும், ஒரே CD-யில் பதிவேற்றம் செய்து திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் நேரில் ஆஜராகி பதிவு செய்து கொள்ளுமாறும், மேலும் விவரங்களுக்கு முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரிலோ அல்லது 0431-2410579 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு அறியலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.குகோவிந்தராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.